**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.96/2022**

20.09.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.கோ.லதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 விஜயபாலன் த/பெ.அப்பாவு நயினார்:

I.A.No.7/2025 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் வாதி சாட்சி 1 விஜயபாலன் திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் வழக்குரையில் என் மனைவி வயது 75 என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் வயது முறையே 67 மற்றும் 74 என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும் என் மனைவிக்கும் 8 வயது வித்தியாசம் என்றால் ஆமாம். என் மனைவி பழைய SSLC படித்துவிட்டு ஆசிரியர் பயிற்சியும் பெற்று ஆசிரியராக பணிபுரிந்தார். என் மனைவிக்கு திருமணம் ஆகும் வரை அவருடைய தந்தையுடன் ஒரே குடும்பமாக வசித்துவந்தார் என்றால் ஆமாம். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1968ல் திருமணம் நடந்தது. 12.01.1966ல் அனந்தநாத நயினாருக்கும் விமலநாத நயினாருக்கும் இடையில் ஏற்பட்ட பாகப்பத்திரம் வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். என் திருமணத்திற்கு முன்பே மேற்படி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதால் என் மனைவிக்கு அந்த பாகப்பிரிவினை பற்றிய விவரங்கள் நன்றாக தெரியும் என்றால் ஆமாம். 05.01.2022 அன்று என் மனைவியும் 1,2 பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை செய்துகொண்ட பத்திரம் வாசாஆ.17 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வாசாஆ.4 பாகப்பிரிவினை பற்றி மேற்படி வாசாஆ.17ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.4 பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் என் மனைவியின் பெற்றோர் பெயரில் இருந்த கிரையபத்திரங்களை பார்த்து வாசாஆ.17 பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்து விபரங்கள் எழுதப்பட்டது என்றால்

சரிதான். வாசாஆ.4 பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவா 2, 4, 7, மற்றும் 9 அயிட்ட சொத்துக்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். தாவாவில் கண்டுள்ள இதர சொத்துக்கள் சம்மந்தப்பட்ட கிரையபத்திரங்கள் வா.சாஆ.17 பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்ட சமயத்தில் என்னிடம் இருந்தது என்றும் அதை பார்த்து சொத்து விபரங்கள் எழுதப்பட்டது என்றும் சொன்னால் பத்திரங்கள் என்னிடம் இல்லை, 1ம் பிரதிவாதியிடம் தான் இருந்தது. பாகப்பிரிவினை பத்திரம் எழுதுவதற்கு முன்பு பாகம் பிரித்துக்கொள்வது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை இருந்தது என்றால் பிரச்சனை எதுவும் இல்லை. நில அபகரிப்பு பிரிவில் என் மனைவி மூலமாக புகார் கொடுத்திருந்தேனா என்றால் கொடுத்திருந்தேன். காவல் நிலையத்தில் விசாரணையின் போது எங்களுக்குள் சமாதானமாக போகும்படி ஆலோசனை கூறினார்கள் என்றால் ஆமாம். காவல் நிலைய விசாரணையின் போது என் மனைவிக்கு 2 ஏக்கர் 50 சென்ட் நிலம் பாகம் ஒதுக்குவதாக பேசப்பட்டது என்றும் அதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்றும் சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் ஏற்பட்ட சமாதான பேச்சுவார்த்தை படிதான் வாசாஆ.17 பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். சமாதான பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்படிக்கை படிதான் பாகப்பிரிவினை பத்திரத்தில் என் மனைவிக்கு சொத்து பாகம் ஒதுக்கப்பட்டது என்றால், 2 சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது, 2வது உடன்படிக்கை 1ம் பிரதிவாதி எழுதிகொடுத்தப்படி 1 ஏக்கர் 49 சென்ட் தான் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் என் மனைவிக்கு ஒதுக்கப்பட்டது. பாகப்பிரிவினை பத்திரத்தை படித்து பார்த்து தான் என் மனைவி கையொப்பம் செய்தார் என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில், சில பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நாம் இதன் அடியில் கண்டுள்ளவாறு ஏற்ற இறக்கங்களுக்கு சம்மதப்பட்டு பின்வருமாறு பாகம் பிரித்துக்கொள்கிறோம், என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இனி நமக்குள் ரத்த சம்மந்தமே தவிர தனரொன சம்மந்தம் ஏதும்

இல்லை என்றும் பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மனைவியின் குடும்பத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்ற விபரம் தெரிந்து தான் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. வேறு சொத்துக்கள் இருந்தாலும் அதில் பாகம் கேட்கமாட்டேன் என்ற உறுதிமொழியுடன் தான் பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது என்றால் அப்படி இல்லை. வாசாஆ.17 பாகப்பிரிவினை பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று இந்த வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கும் இடையில் ஏற்கனவே இறுதியாக பாகப்பிரிவினை நடந்துவிட்டது என்றும் என் மனைவி மீண்டும் பாகப்பிரிவினை கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல, விடுபட்ட சொத்தில் தான் பாகம் கேட்கிறோம். என் மனைவியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.